பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 08 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடு முழுவதும் அரசு திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொள்ள வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
2. முக்கிய கனிமங்கள், வேளாண்மை, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த இந்தியாவும் - சிலியும் முடிவு செய்துள்ளன.
3. ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.
4. குஜராத் மற்றும் ராஜஸ்தானில் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.
5. தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் அரசு திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொள்ள வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆக்கப்பூர்வமான நிர்வாகம் மற்றும் உரிய நேரத்தில் திட்டங்களை செயல்படுத்துதல் தொடர்பான பிரகதி தளத்தின் 44-வது ஆலோசனைக் கூட்டம் பிரதமர் தலைமையில் நேற்று புதுதில்லியில் நடைபெற்றது.

அப்போது பேசிய பிரதமர், திட்டங்கள் தாமதமடைவதால் செலவுகள் அதிகரிப்பதுடன், பொதுமக்களுக்கு கிடைக்கும் பலன்களும் தாமதமாகும் என்று தெரிவித்தார்.

வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டு மத்திய மாநில அரசு துறை அதிகாரிகள் செயல்பட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த கூட்டத்தில் உத்திரபிரதேசம், உத்ராகண்ட், கர்நாடகா, ராஜஸ்தான் உள்ளிட்ட 11 மாநிலங்களில் 76 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

[]<<<>>>[]

ஐ என் எஸ் அரிகத் நீர்மூழ்கி போர்க்கப்பலை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

விசாகப்பட்டினம் துறைமுகத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், நாட்டின் இரண்டாவது அணுசக்தி நீர்மூழ்கி கப்பலான ஐ என் எஸ் அரிகத் கடற்படையில் இணைக்கப்படுகிறது.

[]<<<>>>[]

பெரிய துறைமுகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கான ஊதிய மறுசீரமைப்புக்கு மத்திய கப்பல் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், கப்பல் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் முன்னிலையில், ஊதிய பேச்சுவார்த்தை குழுவுக்கும் இந்திய துறைமுக சங்கத்துக்கும் இடையே புதுதில்லியில் நேற்று கையெழுத்தானது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால், கடல்சார் துறையின் முதுகெலும்பாக விளங்கும் துறைமுகத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அனைத்து துறைமுகங்களிலும் இணக்கமான பணிச்சூழலை ஏற்படுத்த உறுதி பூண்டுள்ளதாக திரு சர்பானந்த சோனாவால் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

தொழிலாளர்களின் நலனில் மத்திய அரசு கூடுதல் அக்கறை கொண்டுள்ளதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் குறித்து புதுதில்லியில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று அவர் ஆலோசனை நடத்தினார்.

அப்போது பேசிய அமைச்சர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தொழிலாளர்கள் முதுகெலும்பாக திகழ்கின்றனர் என்று கூறினார்.

பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட வேலைவாய்ப்புடன் கூடிய ஊக்கத் தொகை திட்டம் குறித்து தொழிற்சங்கங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் வேலைவாய்ப்புடன் இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

முக்கிய கனிமங்கள், வேளாண்மை, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திட இந்தியாவும் - சிலியும் முடிவு செய்துள்ளன.

இந்தியா வந்துள்ள சிலி வெளியுறவுத்துறை அமைச்சர் திரு அல்பர்ட்டோ **van klaveren** புதுதில்லியில் நேற்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கருடன் பேச்சு நடத்தினார்,

இந்திய – சிலி கூட்டு ஆணையத்தின் இரண்டாவது கூட்டத்திற்கும் அவர்கள் தலைமை வகித்தனர்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு ஜெய்சங்கர், இந்த கூட்டம் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என கூறியுள்ளார்.,

வர்த்தகம், முதலீடு, விண்வெளி உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டாகத் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

பேரிடர் மேலாண்மையில் ஒத்துழைப்புக்கான இந்திய- ரஷ்ய கூட்டு ஆணையத்தின் இரண்டாவது கூட்டம் மாஸ்கோவில் நேற்று நடைபெற்றது.

இதில் இந்தியா சார்பில் உள்துறை இணை அமைச்சர் திரு நித்யானந்த ராய் தலைமையிலான குழு பங்கேற்றது.

ரஷ்யா சார்பில் அந்நாட்டு பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு குரென்கோவ் அலெக்சாண்டர் தலைமையிலான குழு, இக்கூட்டத்தில் பங்கேற்றது.

பேரிடர் மேலாண்மையில் சிறந்த நடைமுறைகளை பரிமாறிக் கொள்ளவது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பேரிடர் மேலாண்மை தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே ஏற்கெனவே கையெழுத்தான ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்கான உத்திகளை வகுப்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

**[]<<<>>>[]**

மாற்றுத்திறனாளி கைவினை கலைஞர்கள் தயாரித்த கலைப்பொருட்கள் கண்காட்சியை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திரகுமார் ராஞ்சியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

அடுத்த மாதம் எட்டாம் தேதி வரை நடைபெறும் இக்கண்காட்சியில் 20 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த கைவினை கலைஞர்களின் படைப்புகள் இடம்பெறுகின்றன.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய அடுத்த மாதம் ஐந்தாம் தேதி கடைசி நாளாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஆறாம் தேதி நடைபெறுகிறது.

மனுக்களை விலக்கிக் கொள்ள ஒன்பதாம் தேதி கடைசி நாளாகும்.

இரண்டாவது கட்டமாக அடுத்த மாதம் 25-ஆம் தேதி 26 தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதனிடையே முதல்கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 24 தொகுதிகளுக்கான வேட்புமனுக்களை விலக்கிக் கொள்ள நாளை கடைசி நாளாகும்.

நேற்று நடைபெற்ற வேட்புமனுக்கள் பரிசீலனையின் போது தாக்கல் செய்யப்பட்ட 183 மனுக்களில் 160 மனுக்கள் ஏற்கப்பட்டன.

முதல்கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு அடுத்த மாதம் 18-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

பசிபிக் தீவு நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்த இந்தியா முன்னுரிமை அளிப்பதாக வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு பபித்ரா மார்கெரிட்டா கூறியுள்ளார்.

டோங்காவில் நடைபெற்ற 53-வது பசிபிக் தீவு நாடுகளின் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர் நாடாக இந்தியா பங்கேற்றது.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட வெளியுறவுத் துறை இணை அமைச்சர், டோங்கா, துவாலு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் நேற்று பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பு பசிபிக் தீவு நாடுகளுடனான இந்தியாவின் நீண்டகால ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா, பிஜி, நியூசிலாந்து, டோங்கா, துவாலு உள்ளிட்ட 18 நாடுகளைக் கொண்ட அமைப்பாக பசிபிக் தீவு நாடுகள் கூட்டமைப்பு திகழ்கிறது.

இந்த அமைப்பின் சிறப்பு அழைப்பாளராக 2002-ம் ஆண்டு முதல் இந்தியா பங்கேற்று வருகிறது.

[]<<<>>>[]

ஜார்க்கண்ட் அமைச்சர் திரு சம்பய் சோரன், அமைச்சர் பதவியிலிருந்தும் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் விலகுவதாக அறிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் திரு சிபு சோரனுக்கு இது தொடர்பாக அவர் கடிதம் எழுதியுள்ளார்.

கட்சியின் செயல்பாடுகளும் கொள்கைகளும் தமக்கு ஏற்புடையதாக இல்லை என அவர் அதில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே முதலமைச்சராக பதவி வகித்த திரு சம்பய் சோரன், மீண்டும் திரு சிபு சோரன் முதலமைச்சராக பதவியேற்றதை அடுத்து, அந்த அமைச்சரவையில் நீர்வளம், உயர்கல்வித் துறை அமைச்சராக பதவி வகித்து வந்தார்.

**[]<<<>>>[]**

ராக்கெட்டிலிருந்து செயற்கைக்கோளை பிரிக்கும் இலகுரக அதிநவீன தொழில்நுட்பம் குறித்த உரையாடல் நிகழ்ச்சிக்கு சென்னை வானொலியின் மாநில செய்திப் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த ராக்கெட் விஞ்ஞானி கிளிண்டன் ஆண்டனியுடன் எமது செய்தியாளர் எஸ். ஜாய் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சி இன்று காலை மணி 8-30 முதல் 9-00 மணிவரை ஒலிபரப்பாகவுள்ளது.

பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

**[]<<<>>>[]**

மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநராக திரு **Rajwinder Singh Bhatti** நியமிக்கப்பட்டுள்ளார்.

எல்லை பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநராக திரு **Daljit Singh Chaudhury** நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது சாஸ்த்ர சீமாபால் பிரிவின் தலைமை இயக்குநராக பொறுப்பு வகித்து வருகிறார்.

இவர்களை இப்பொறுப்புகளில் நியமிக்க, நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

[]<<<>>>[]

குஜராத் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வதோதரா, துவாரக, ஜாம்நகர் உள்ளிட்ட மாவட்டங்கள் மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ள நிலைமை குறித்து முதலமைச்சர் திரு பூபேந்திர படேல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளமாக அம்மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு ரிஷிகேஸ் படேல் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படையின் ஐந்து குழுக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே மாநிலத்தின் மழை வெள்ள நிலைமை குறித்து முதலமைசசர் திரு பூபேந்திர படேலிடம் பிரதமர் திரு நரேந்திரமோடி தொலைபேசியில் கேட்டறிந்தார்.

குஜராத்துக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும என அப்போது முதலமைச்சரிடம், திரு நரேந்திரமோடி உறுதியளித்தார்.

இதனிடையே சௌராஷ்டிரா, கட்ச் உள்ளிட்ட பகுதிகளில் அதி கனமழை தொடரும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் பெய்து வரும் கனமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தின் கிழக்குப் பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தேசிய விளையாட்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

புகழ்பெற்ற ஹாக்கி வீரர் மேஜர் தயான் சந்தை கௌரவிக்கும் வகையில் அவரது பிறந்த தினமான ஆகஸ்ட் 29-ம் தேதி 2012-ம் ஆண்டு முதல் நாடு முழுவதும் தேசிய விளையாட்டு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்தவும், இளைய தலைமுறையினரை விளையாட்டில் ஈடுபடுத்தும் நோக்கிலும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸில் நேற்று தொடங்கிய பாராலிம்பிக் போட்டியில் பேட்மிண்டன், வில்வித்தை, டேக்வாண்டோ, சைக்கிளிங் போட்டிகளில் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

வில்வித்தை மகளிர் பிரிவில் ஷீத்தல் தேவி, சரிதா ஆகியோரும், ஆடவர் பிரிவில் ராகேஷ் குமார், ஹர்விந்தர் சிங் உள்ளிட்டோரும் பங்கேற்கின்றனர்.

சுகந்த் கதம், மனோஜ் சர்க்கார், துளசிமதி முருகேசன், மணீஷ் ராம்தாஸ் உள்ளிட்டோர் பாரா-பேட்மிண்டன் போட்டிகளில் விளையாடவுள்ளனர்.

பாரா-டேக்வாண்டோ பிரிவில் அருணாவும், சைக்கிளிங்கில் ஜோதி கடேரியாவும் பங்கேற்கின்றனர்.